கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.94/2004** தேதி**: 04.02.2026**

வாதி தரப்பு சாட்சி -1 (சுதாகர், த/பெ.சிவசங்கர்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**2** மற்றும் **8** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

(1) வழக்கை நான் எதன் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் வாரிசு என்ற அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்திற்கு நான் வாரிசு என்று காண்பிப்பதற்கு தஸ்தாவேஜீகள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாரிசு பட்டியல் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வாரிசு பட்டியல் எனக்கு வழக்கு தாக்கல் செய்ய அதிகாரம் அளிக்காது என்றால் சரியல்ல.

(2) நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் Trust க்கு நான் தான் வாரிசு என்றும் டிரஸ்டி என்றும் விளம்புகை பரிகாரம் கோரி உள்ளேனா என்றால் கோரியுள்ளேன். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். நான் அவ்வாறு எந்த பரிகாரமும் கோர வில்லை என்றாலும் வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் மேற்சொன்ன பரிகாரம் கோராமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இவ்வழக்கு நிலைக்கத்ததக்கதல்லல என்றால் சரியல்ல.

(3) கிருஷ்ணசாமி முதலியார் டிரஸ்ட் என்பது தற்போது உள்ளதா என்றால் உள்ளது. நிர்வாகிகளும் இருக்கிறார்கள். சொத்து தான் இல்லை. 7 ஆம் பிரதிவாதி

PHEBE B
Digitally signed by PHEBE B
Date: 2026.02.04 17:03:46 +0530

குறுக்கு விசாரணை செய்யும்போது நிர்வாகிகள் இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ஜனார்த்னன் முதலியார் கடைசியாக நிர்வாகியாக இருந்தார் என்றால் சரிதான். அதன் பிறகு தொடர்ச்சியாக நிர்வாகிகள் இருந்தார்கள் என்பதற்கும் நான் நிர்வகித்தேன் என்பதற்கும் ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

(4) ஆகவே இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எந்த வித முகாந்திரமும் அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து தனியார் சொத்தா பொது சொத்தா என்றால் தனியார் டிரஸ்ட் சொத்து ஆகும். 1920 உயில் படி தனியார் டிரஸ்ட்ன் சொத்துக்கள் எனது குடும்ப பயன்பாட்டிற்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளதா அல்லது தரும காரியங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளதா என்றால் இரண்டிற்கும் தான் ஒதுக்கப்பட்டுள்ளது.

(5) ஆகவே தனியார் மற்றும் பொது தரும காரியங்களுக்கு சொத்துகள் ஒதுக்கப்பட்டு இருப்பதால் இந்த வழக்கை சார்பு நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்றாலும் சரியல்ல. நான் பொறுப்பாளர் என்ற அடிப்படையில் அசல் வழக்கு எண் 225/2003 ல் பெறப்பட்ட தீர்ப்புரை தவறு என்று ஜனார்த்தனர் முதலியார் மீது ஏதேனும் புகார்அளித்தேனா என்றால் இல்லை.

(6) மேற்சொன்ன நீதிமன்ற தீர்ப்பை பற்றி நான் எப்போது தெரிந்துக்கொண்டேன் என்றால் தீர்ப்பு பெறப்பட்ட இரு மாதங்களில் தெரிந்துகொண்டேன். தெரியவந்த பிறகு பிரபாகரன் மற்றும் ஜனார்த்தனன் ஆகியோருக்கு அறிவிப்பு ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. வழக்கு தான் தாக்கல் செய்தேன்.

PHEBE B
Digitally signed by PHEBE B
Date: 2026.02.04 17:03:50 +0530

நிர்வாகத்திற்கும் சொந்தமான அனைத்து சொத்துக்களையும் நான் இந்த வழக்கில் காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் சொத்தின் வழிகாட்டு மற்றும் சந்தை மதிப்பு என்ன என்று காண்பித்துள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

(7) நான் என்னுடைய முதல் விசாரணையில் தாக்கல் செய்துள்ள வாக்குமூலத்தில் "சொத்து ரூ 55 லட்சத்திற்கு மேல் பெறுமானம் உள்ளது. ரூ.4,52,100/- மற்றும் ரூ.4,57,350/- மற்றும் ரூ.73,500/- என்ற கிரையத் தொகைகள் அற்பமானவை சிறுப்பிள்ளைத்தனமானவை ஏற்கததகாதவை" என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ஆகவே நானே சொத்து மதிப்பு ரூ 55 லட்சம் என்று குறிப்பிட்டுவிட்டு நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கில் குறைவாக மதிப்பிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நிர்வாக சொத்தில் ஒரு அயிட்டத்தினை நான் எனது மணைவிக்கு தான செட்டில் மெண்ட் எழுதி வைத்துள்ளேன் என்றால் சரிதான்.

(8) நான் அந்த சொத்தை எனது மணைவி பெயருக்கு தான செட்டில் மெண்ட் எழுதும் முன்பு நீதிமன்ற அனுமதி பெற்றேனா என்றால் இல்லை. அது நிர்வாக சொத்தா என்றால் உயிலில் உள்ளது. எனது அப்பா பெயரில் இருந்து எனக்கு கிடைக்கப்பெற்றது . அதுவும் நிர்வாக சொத்து தான் என்றாலும் நான் வழக்கிற்காக தனி சொத்து என்று கோருகிறேன் என்றாலும் சரியல்ல.

(9) இவ்வழக்கை போல அசல் வழக்கு எண் 964/2004 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான் . இவ்வழக்கில் உள்ள பரிகாரம் தான் அதிலும் கோரி உள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் என்ன ஆயிற்று

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.04 17:03:55 +0530

என்றால் பிரிவு 92 ன் கீழ் மனு தாக்கல் செய்யவில்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் மீது மேல்முறையீடு எண் 39/2017 ல் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீடு சென்றேன் என்றால் சரிதான். அது என்ன ஆயிற்று என்றால் இன்று தீர்ப்புரைக்காக ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

(10) மேற்சொன்ன வழக்குகள் பற்றி இவ்வழக்கில் நான் குறிப்பிட்டுள்ளேனாஎன்றால் இல்லை. நிர்வாக சொத்து தற்போது ஏதேனும் மீதம் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு நிலுவையில் இருக்கும்போது பிரதிவாதிகள் 6 மற்றும் 7 சொத்தை விற்றதால் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வில்லங்கங்களைப்பற்றி நான் எப்போது அறிந்துக்கொண்டேன் என்றால் 2023 ல் தான் தெரிந்துக்கொண்டேன்.

(11) கூடுதல் ஆவணங்கள் பற்றி 2023 லேயே தெரிய வந்திருக்க அதனை நீதிமன்றத்தில் 2026 ல் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் மறுசீராய்வு மனு தாக்கல் செய்து இருந்ததால் வழக்கில் எந்த முன்னேற்றமும் இல்லாமல் இருந்தது ஆகவே தற்போது தாக்கல் செய்துள்ளேன். வழக்கை கால தாமதம் படுத்தும் நோக்கில் தான் இந்த ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(12) வில்லங்கத்தை ஏற்படுத்திய நபர்கள் அனைவரையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. அந்த கிரையங்கள் மற்றும் ஆவணங்களை ரத்து செய்து விட்டதால் சேர்க்கவில்லை. வா.த.சா. 27 முதல் 31 வரையிலான ஆவணங்களான வரி ரசீதுகள் அனைத்தும் இறந்து போன ஜனார்த்தனர் முதலியார் அவர்கள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.04 17:03:59 +0530

நிலுவையில் இருக்கும்போதே பிரபாவதி அவர்கள் பட்டாவை தவறாக ரத்து செய்துவிட்டார்கள் என்றாலும் அதை மீண்டும் மாற்ற கோரி அதற்கு எதிராக அவர் தாசில்தார் மற்றும் வட்டாட்சியர் அலுவலகத்திலும் மேல் முறையீடு செய்தார் என்றாலும் அதன் பின் நீதிப்போராணை மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த மனுவில் மனுதாரர் DRO முன் மனு தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டிருந்து என்றாலும் தற்போது அது நிலுவையில் உள்ளது என்றாலும் சரிதான்.

(13) ஆகவே RDO பட்டா மாற்ற முடியாது என்று கொடுத்த உத்தரவானது இறுதி உத்தரவு இல்லை என்றால் சரிதான். நான் கூடுதல் வாக்குமூலம் தாக்கல் செய்ய நீதிமன்ற அனுமதி பெற்று தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்கு தேவையற்றது என்றால் சரியல்ல. என்னுடைய அண்ணன் பிரபாகரன் இரண்டாம் பிரதிவாதி தாக்கல் செய்த Order 7 Rule 11 மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு அது உயர்நீதிமன்றத்தில் மறுசீராய்விற்காக CRP 5152/25 என்ற எண்ணில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

(14) அவ்வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். ஜனார்த்தனன் முதலியார் முறையாக நீதிமன்ற அனுமதி பெற்று வழக்கு சொத்தை விற்றுள்ளார் என்றாலும் அந்த கிரையங்களை குறித்து கேள்வி கேட்க எனக்கு அதிகாரம் இல்லை என்றாலும் சரியல்ல.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை முற்றிற்று .

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.04 17:04:04 +0530

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.04 17:04:11 +0530

***Additional District Munsif ,***
***Cuddalore.***